Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 343

சனிக்கிழமை 04 நவம்பர் 2023

ஐப்பசி 18 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# ஐ.நா.வின் கேள்விக்கு பதிலளிக்க வேண்டுமா?

## நீதிமன்றத் திறப்புவிழாவில் ஜனாதிபதி கேள்வி

கொழும்பு, நவம்பர் 4

ஐ.நா.வின் கேள்விகளுக்கும், நியாயமற்ற விடயங்களுக்கும் இலங்கை கட்டாயம் பதிலளிக்கத்தான் வேண்டுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. »11



# மருத்துவமனைக்குச் சென்றவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 4

சுகவீனம் காரணமாக மருத்துவமனைக்குச் சென்ற முதியவர் ஒருவர், மயங்கி வீழ்ந்து »11

# கண் வீக்கம்: மூதாட்டி பலி!

வடமராட்சி, நவ. 4

கண்வீக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைக்காக மருத்துவமனையில் »11

# தூக்கிட்ட நிலையில் சிறுவனின் சடலம்!

புதுக்குடியிருப்பு, நவ. 4

புதுக்குடியிருப்பு, பத்தாம் வட்டார பகுதியில் 16 வயதுச் சிறுவன் ஒருவன் தூக்கிலிருந்து »11

# மரம் வீழ்ந்து விபத்து முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 4

மரம் தறிக்கும்போது ஏற்பட்ட விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். »11

# டென்மார்க்கில் தீ விபத்து யாழ்ப்பாணவாசி இறப்பு!

ஸ்டொக்ஹோம், நவ. 4

டென்மார்க்கில் இடம்பெற்ற தீ விபத்தொன்றில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று »11

# அமைச்சர் நிர்மலா சீதாராமன் யாழ்ப்பாணத்துக்குப் பயணம்!



யாழ்ப்பாணம், நவ. 4

இரண்டு நாள்கள் பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களில் ஈடுபட்டார். யாழ்ப்பாணத் »11

# நல்லூர் குருக்கள் உலகப் பிரபலம்!

## நிர்மலா சீதாராமன் புகழாரம்

யாழ்ப்பாணம், நவ. 4

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பிரதமகுருக்களான விஸ்வ பிரசன்னா குருக்களை »11

# கடும் மழையால் கிணறு மாயம்!

## பொலிகண்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 4

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடுமையான மழை காரண »11

# மோ.சைக்கிள் திருட்டு: நபரொருவர் கைது

## பாகங்களாக்கப்பட்ட நிலையில் மோ.சைக்கிளும் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ்ப்பாணத்தில் திரையரங்கு ஒன்றுக்கு முன்னால் நிறுத்தப்பட்ட மோட்டார்சைக்கிளொன்று திருடப்பட்டதாகப் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், இந்தத் திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். »11

# காஸா நகரம் சுற்றிவளைப்பு

## பெரும் தாக்குதலுக்கு தயாராகிறது இஸ்ரேல்

டெல்அவிவ், நவ. 4

காஸா நகரம் இஸ்ரேல் இராணுவத்தால் முற்றாகச் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. அங்கு இதுவரை இடம்பெறாத பெரும் தாக்குதலொன்றை நடத்துவதற்கு இஸ்ரேல் தயாராகியுள்ளது. இதையடுத்து இஸ்ரேலியச் சிப்பாய்கள் கறுப்புப் பைகளில் சடலங்களாக அனுப்பப்படு »11

# சீனி இனி ரூபா 275!

கொழும்பு, நவ. 4

சீனிக்கான அதிகபட்சசில்லறைவிலை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோ 275 ரூபாவாகவும் பொதி செய்யப்பட்ட ஒரு »11

# கிளிநொச்சி நீதிமன்றில் 140 கிலோ கஞ்சா திருட்டு

## நீதிமன்றப் பணியாளர் உட்பட நான்கு பேர் கைதாகினர்

கிளிநொச்சி, நவ. 4

கிளிநொச்சி நீதிமன்றத்தில் 140 கிலோ கஞ்சாவைத் திருடிய குற்றச்சாட்டில், நீதிமன்றத்தின் பணியாளர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் சான்றுப்படுத்தப்பட்டு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த கஞ்சா திருடப்பட்டிருந்தது. இதனையடுத்து கிளிநொச்சி மாவட்டக் குற்றத்தடுப்புப் »11

# பலாலி விமான நிலையத்தில் வாள்வெட்டுக்களுடன் தொடர்புடையவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபரொருவர் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலை »11

Digitized by Noolaham Foundation

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வளங்களைச் சூறையாடியோரை குற்றவாளிக்கூண்டில் நிறுத்துக!

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, நவ. 4

**போரை முடிவுக்குக் கொண்டுவந்தோம், போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம் எனக் கூவி தேசிய வளங்களை அபகரித்தோரை குற்றவாளிக்கூண்டில் நிறுத்தவேண்டும். கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை திரும்பப் பெறவேண்டும்.**

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

போர் வெற்றி என்ற பெயரிலும், தேசப்பற்று என்ற போர்வையிலும் மக்களின் தேசிய வளங்களை ராஜபக்ச குடும்பங்கள் சூறையாடியுள்ளது. போர் முடிந்தாலும் நாடு இன்னமும் சுதந்திரம் அடையவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு 3 ஆவது முறையாக மின்கட்டணத்தை அதிகரித்து நாட்டு மக்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. அத்துடன் நாளுக்குநாள் விலைவாசிகளும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

பிற்போக்குத்தனமாக பெறுமதி சேர் வரி 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முழுப்பொறுப்பும் ராஜபக்சக்களே.

நாட்டின் வளங்களை அவர்கள் எவ்வாறு திருடினார்கள் என்பதை பண்டோரா பத்திரங்கள் வெளிப்படுத்தின.

அதற்கமைய அவர்களுக்கெதிராக நாட்டின் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை நாட்டுக்குப் பெற வேண்டும் - என்றார். (ச-44)



# இந்திய நிதி அமைச்சர் நல்லூரில் வழிபாடு

யாழ்ப்பாணம், நவ. 4

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்ற அவர் அங்கு வழிபாடுகளிலும் ஈடுபட்டார். இந்தப் பயணத்தின்போது இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே, இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

இதன்போது இந்திய நிதி அமைச்சர் அங்கு கூடியிருந்த சிறுவர், சிறுமியருடன் கலந்துரையாடியதுடன் ஒளிப்படமும் எடுத்துக் கொண்டார். (ஒ-66)




# ஜனாதிபதி – சபாநாயகர் இடையே முரண்பாடு

கொழும்பு, நவ. 4

எரிபொருள்களின் விலை சிறிதளவு அதிகரித்துள்ள போதிலும், அதனை மக்களால் தாங்கிக் கொள்ளமுடியும். ஆனால் வற் வரியை அதிகரிப்பதற்கான தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஆயினும், வற் வரியை 18 சதவீதம் அதிகரிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டாலும், அது மாறலாம் என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு அதிக சதவீதத்தால் வற் வரி அதிகரிக்கப்பட்டால் மக்கள் பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்சினைக்கு உள்ளாக நேரிடலாம் எனவும்சபாநாயகர் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வற்வரியை 18 வீதத்தால் உயர்த்தவில்லை என்றால், அடுத்த வருடம் நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படும் எனவும் கட்டாயம் வற் வரியை வரவு - செலவுத் திட்டத்தில் அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் கூறியுள்ளார். (ஒ-இ)

# இலவச குடிநீர் இணைப்பை பெறாதவர்களுக்கான அறிவிப்பு

முல்லைத்தீவு, நவ. 4

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களில் இதுவரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்பட்ட இலவச குடிநீர் இணைப்பைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தேசிய அடையாள அட்டை, குடும்ப பதிவு அட்டை மற்றும் காணி தொடர்பான ஆவணங்களுடன் தங்களின் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கோரியுள்ளது.

அத்துடன் ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டு இதுவரை நீர் இணைப்பைப் பெற்றுக் கொள்ளாதவர்களும் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களின் பதிவுகளை மீள உறுதி செய்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் பின்னரான பதிவுகளுக்கு இலவச குடிநீர் இணைப்பு எதிர்வரும் காலங்களில் வழங்கப்படமாட்டாது என்பதையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப் புச்சபை தெரிவித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப் புச்சபையின் முல்லைத்தீவு நகர அலுவலகம் மூன்றாம் கட்டை (மஞ்சள் பாலத்தடி) சிலாவத்தையில் அமைந்துள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 021 229 2070 அல்லது 070 5500 440 என்ற இலக்கங்களை தொடர்பு கொள்ள முடியும். (ஒ-214)




# மருத்துவர்கள் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, நவ. 4

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட மாகாண மட்டத்திலான வேலைநிறுத்தங்களை தற்காலிமாக இடைநிறுத்தியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

தமது பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த சாதகமான பதிலை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்றுமுன்தினம் முதல் மாகாண மட்டத்தில் தொடர்ச்சியான அடையாள வேலைநிறுத்தங்களை ஆரம்பித்தது. ஊவா மாகாணத்தில் உள்ள அனைத்து அரச மருத்துவமனைகளிலும் உள்ள மருத்துவ அதிகாரிகள் அடையாள வேலைநிறுத்தத்தில் இணைந்திருந்தனர். வடமாகாணத்தில் மருத்துவ அதிகாரிகள் நேற்றுக் காலை அடையாள வேலைநிறுத்தத்தை ஆரம்பித்ததுடன், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் மருத்துவர்கள் முறையே நவம்பர் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவிருந்தனர்.

இவ்வாறான நிலையில், அரச அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற சாதகமான பதிலை கருத்திற்கொண்டு வேலைநிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-இ)

## பொலிஸ்மா அதிபருக்கு

# 4ஆவது தடவையாகவும் சேவை நீடிக்கப்பட்டது

கொழும்பு, நவ. 4

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மீண்டும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது. பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு இவ்வாறு சேவை வழங்கப்படுவது இது நான்காவது முறையாகும். இதற்கு முன்னர் சி.டி.விக்ரமரத்னவுக்கு மூன்று மாதங்கள் என்ற அடிப்படையில் இரண்டு முறையும், மூன்று வாரங்கள் சேவை நீடிப்பு ஒரு முறையும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருந்தது.

மூன்று வாரகால சேவை நீடிப்பு நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்த நிலையிலேயே ஜனாதிபதி இவருக்கு மீண்டும் சேவை நீடிப்பை வழங்கியுள்ளார்.

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களின் பிரகாரம் இவ்வாறு சேவை நீடிப்பை வழங்கியுள்ளார். கடந்த முறை சேவை நீடிப்பு வழங்கப்பட்டபோது, அரசமைப்புப் பேரவையின் அனுமதி பெறவில்லையென எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை சுமத்திய நிலையில், ஜனாதிபதி மீண்டும் சேவை நீடிப்பை வழங்கியுள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருத்தித்துறையில் மருத்துவர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 4

**வடமாகாணம் தழுவியதாக நேற்றுக் காலை முதல் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் மருத்துவர்களால் முன்னெடுக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை மருத்துவர்கள் கவன வீர்ப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.**

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியாக முன்னெடுத்துவரும் 24 மணி நேர பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை வடமாகாணத்தில் உள்ள சகல மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இதையடுத்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனை மருத்துவர்கள் நேற்று காலை 9.30 மணிக்கு மருத்துவமனை பிரதான வாயில் பகுதியில் ஒன்று கூடி கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதன்போது மருத்துவர்களது கோரிக்கைகள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் மருத்துவமனைக்கு வருகைதந்த பொது மக்களுக்கு மருத்துவர்களால் விநியோகிக்கப்பட்டது.

(ஒ-100)

## வடக்கில் அதிபர் சேவைக்கு நியமனக்கடிதம் கையளிப்பு

### கலாசாலையில் இன்று

யாழ்ப்பாணம், நவ. 4

வடக்கு மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கு மத்திய கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்டு 401 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நியமனதாரிகள் காலை 8 மணிக்கு தவறாது சமுகமளிக்கவேண்டும்.

அத்துடன் நியமனதாரர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியவற்றின் மூலமாக தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். நியமனதாரர்கள் தவிர்ந்த எவரும் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளமுடியாது.

தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட தொடர்பிலக்கத்தை குறித்துக் கொள்வது தங்களுக்கான ஆசனங்களை இனங்காண்பதற்கு இலகுவாக அமையும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ச-27)

## பல்பொருள் அங்காடியில் பழுதடைந்த பொருள்கள்

### ரூ. 2 இலட்சம் தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ்.நகரப் பகுதியிலுள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் பழுதடைந்த பொருள்களை விற்பனை செய்தமை கண்டறியப்பட்ட நிலையில், உரிமையாளருக்கு 2 இலட்சத்து 24 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்.நகரப் பகுதியில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.உதயபாலா தலைமையிலான பொதுச்சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் அண்மையில் திடீர் சோதனையை முன்னெடுத்தனர்.

இதன்போது பல்பொருள் அங்காடியொன்றில் எலி கடித்த, பூஞ்சணம் பிடித்த பழுதடைந்த பொருள்கள் மீட்கப்பட்டன.

அதனையடுத்து உரிமையாளருக்கெதிராக வழக்குப் பதிவுசெய்து.நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். மேலதிக நீதிவான், மக்களுக்கு கேடு விளைவிக்கும் பழுதடைந்தபொருள்களை விற்றமைக்காக இரண்டு இலட்சத்து 24 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டார்.

(ச-17)

# பொருளாதாரத் தாக்கத்திலிருந்து மீண்டெழ சிக்கனம் பேணுதல்!

### முல்லையில் முன்மாதிரி விழிப்புணர்வு

பொருளாதாரப் பிரச்சினை மோசமடையும்போது பொருளாதாரத் தாக்கத்திலிருந்து எவ்வாறு மக்கள் மீளெழவேண்டும்? நிதியை உரிய முறையில் முகாமைத்துவம் செய்தல் ஆகியவை தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் கருத்தரங்கு மல்லாவியில் இடம்பெற்றது. முல்லைத்தீவு, மல்லாவிப் பகுதியில் ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையில் இந்தக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை தற்போது மக்களை வதைப்பதால் நிதிமுகாமைத்துவம் செய்வதில் திண்டாடி வருகின்றனர். பொருளாதாரப் பிரச்சினை மோசமடையும்போது பொருளாதாரத் தாக்கத்திலிருந்து எவ்வாறு மக்கள் மீளெழ வேண்டும்? நிதி முகாமைத்துவத்தை எவ்வாறு பாதுகாப்பது?, கிடைக்கும் பணத்தைச் சிக்கனமாக கையாள்வது ஆகியவை தொடர்பில் தெளிவூட்டும் வகையில் இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு ஒழுங்கமைக்கப்பட்டது. நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் சாந்தமேனன், மற்றும் சுகாதார கல்வி அதிகாரி ஜெயபாலன் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கேற்று விளக்கமளித்தனர்.

(ச-19)

## புதினம் தெரியுமோ?

தின்னையில படுத்திருந்தவனுக்கு திடுக்கெண்டு கலியாணம் நடந்தமாதிரி, ஆரெண்டே அடையாளம் தெரியாம இருந்த கனபேருக்கு சடாரெண்டு ஒரு பப்ளிசிட்டி வெளிச்சம் அடிச்சதில அரகலய போராட்டத்துக்கு பெரிய பங்கிருக்கு. அப்பிடி வெளியில தெரியவந்த கனபேர் அதுக்குப் பிறகும் ஓய்ஞ்சிருக்காமல் சனத்துக்கு ஏதும் நன்மையளைச் செய்யவேணும் எண்டு போராடிக்கொண்டுதான் இருக்கினம். முக்கியமா அரகலயவோட தொடர்புள்ள தமிழ்ப்பெடியள் சிலர் இப்ப அரசியல் கைதியளின்ர விடுதலைக்காண்டி கடும் வேலை செய்துகொண்டிருக்கினம். இப்பிடி ஒருபக்கம் இருக்க, இன்னொரு பக்கத்தால அரகலயவால அடையாளம் கிடைச்ச வேற சிலர், தங்களை இன்னும் எப்பிடி பேமஸாக்கலாமெண்டு குறுக்க மறுக்க ஓடித் திரியினம். அப்பிடி வாய் சும்மா இருக்க முடியாமல், புலியள் பாசிசவாதியள் எண்டு பொத்தம்பொதுவா அடிச்சுவிட்டா ஒரு சட்டத்தரணி.

அவா ஒரு சட்டத்தரணி. எந்த விசயத்தைக் கதைக்கிறதெண்டாலும் அதுக்கு ஆதாரம் சொல்லிட்டு கதைச்சா ஒரு நியாயம் இருக்கு. இல்லாட்டி அவா அப்பிடி புலியள் பாசிசவேலையள் செய்ததைக் கண்டிருந்தா, அதுகளால பாதிக்கப்பட்டிருந்தாக்கூட அதைச் சொல்ல உரிமையிருக்கு. இது ஊரைக் கெடுக்கிற கேள்விச் செவியங்களின்ர கதையளைக் கேட்டிட்டு, அதை வைச்சு புலியள் பாசிசவாதியள் எண்டு நுனிப்புல் மேயிறதெல்லாம், அவையை பின்னுக்கு இருந்து ஆரோ இயக்குகினம் எண்டதைத்தான் காட்டுது.

இப்ப நவம்பர் மாதம். நவம்பர் எண்டாலே தமிழ்ச் சனத்துக்கு முதல்ல நினைவுக்கு வாறது மாவீரர்வாரம் தான். ஒரு கிழமைதான் மாவீரர்நாளை நினைவேந்தினாலும், இந்த மாதம் முழுக்கவே அதைப்பற்றித்தான் சனம் கதைக்கிறதும், நினைக்கிறதுமா இருக்கும். அப்பிடிப்பட்ட ஒரு மாதத்தில, புலிகள் இல்லாமல் போனபிறகும்கூட, ஆமியின்ர கெடுபிடிக்குள்ளையும் மாவீரர்நாளை துணிச்சாலா நினைவேந்தின யாழ்ப்பாணக் கம்பஸுக்குள்ள, புலியளை பாசிசவாதி எண்டு சொன்ன சட்டத்தரணியை கருத்தரங்குக்கு சிலர் கூப்பிட்டு, அது கம்பஸ் பெடியளின்ர எதிர்ப்பால நிப்பாட்டுப்பட்டிருக்கு. பாசிசச்சின்னமான சட்டத்தரணி தன்னைப் பேமஸாக்க இஞ்ச வர நினைக்கிறா எண்டா, கூப்பிட்டவைக்கு என்ன புத்தி? தமிழ்ச் சனத்துக்காக தங்கட உயிரைக்கூட மதிக்காமல் போராடின புலிகளையும், மாவீரரையும் எப்பவும் மதிக்கிற கம்பஸுக்குள்ளேயே, புலிகளுக்கு எதிரான ஆக்களை உருவாக்க ஒரு வேலைத்திட்டம் நடக்குது. உந்தச் சட்டத்தரணியைக் கூப்பிட்டவைதான் அதில மும்முரமா நிக்கினமாம். அண்டைக்கு கருத்தரங்கு கான்சலாக்கேக்க, 'உந்த ஒன்றியக்காரர் நாலைஞ்சு பேர்தான், எங்கட டிப்பார்ட்மண்டில நானூறு பேர், உவங்களை அடிச்சுப்போட்டு நாங்கள் நிகழ்ச்சியை வைப்பம்' எண்டு ஒரு துறையில படிக்கிற பிள்ளையளுக்கு அங்க படிப்பிக்கிற ஒராள் உருவேத்தவும் வெளிக்கிட்டதாம். இப்பிடி பிள்ளையளை அடிதடிக்கு தூண்டுறவைதான், பாசிசம் பற்றியும் புலியள் பற்றியும் சனத்துக்கு வகுபெடுக்கினமாம். அதெல்லாம் கிடக்கட்டும், ஒரு டவுட். ஒவ்வொரு இசத்துக்கும் (கொள்கைக்கும்) ஒவ்வொரு சின்னம் இருக்கும். அப்பிடி பாசிசத்துக்கும் ஒரு சின்னம் இருக்கு. அந்தச் சின்னத்தின்ர பெயரும், புலியளைப் பாசிசவாதியள் எண்டு பேசின சட்டத்தரணியின்ர பெயரும் ஒண்டுதான். அப்ப பாசிசத்தின்ர சின்னத்தையே தன்ர பேரா வைச்சிருக்கிறவாவையும் பாசிசவாதி எண்டு சொல்லலாமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உதயனின் பரிசுக்குவியல்

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான இன்றைய (04.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..............................

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

தினம் ஒரு பரிசு 31

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..............................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..............................

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

மெகா பரிசு

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடை[illegible] அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

# அரையிறுதிக்கான வாய்ப்பை இறுகப்பிடித்தது ஆப்கான்!

**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், நெதர்லாந்தைத் தோற்கடித்து அரையிறுதிக்கான வாய்ப்பை இறுகப்பிடித்துள்ளது ஆப்கானிஸ்தான் அணி.**

இந்த ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் வெற்றிபெற்றால், அது அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகியவற்றின் வெற்றிவாய்ப்பை கேள்விக்கு உட்படுத்தும். ஆதலால், இந்த ஆட்டம் முக்கியமான ஆட்டமாகப் பார்க்கப்பட்டது.

முதலில் துடுப் பெடுத்தாடியது நெதர்லாந்து. அதிரடி வீரர் வெஸ்லியை மூன்று ஓட்டத்திலேயே இழந்தது நெதர்லாந்து. மக்ஸ் ஓ டோட், கொலின் அகர்மன் இருவரும் வலுவான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால், யானை தன் தலையில் மண்போடுவதைப் போன்று தாமாகவே இருவரும் ரன்அவுட் ஆனார்கள். உண்மையில் சிறப்பான நிலையை அடைவதற்கான வாய்ப்பை தேவையற்ற விதத்தில் இழந்தது நெதர்லாந்து. அதன் பின்னர் வந்த சைபிரான்ட், ஸ்கொட் எட்வாட்ஸ் இருவரும்கூட ரன்அவுட் முறையில் வீழ்ந்தனர். ஆக, முதல் 5 வீரர்களில் நால்வரை ரன்அவுட் முறையில் இழந்தது நெதர்லாந்து. இதுவே நெதர்லாந்தைப் பின்னடைவுக்குள் தள்ள அந்த அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் நபி 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கானிஸ்தானுக்கு ஆரம்ப வீரர்களான குர்பராஸ், இப்ராஹிம் சடான் இருவரும் வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கவில்லை. குர்பராஜ் 10 ஓட்டங்களுடனும், இப்ராஹிம் சடான் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். எனினும் அதன் பின்னர் இணைப் பாட்டம் அமைத்த ரஹ்மட் ஷா, ஷாகிடி இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து அணியைப் பலப்படுத்தினார்கள். 51 ஓட்டங்களுடன் ரஹ்மட் ஷா ஆட்டமிழந்தாலும் ஒமர்ஷாய் நிதானமாக ஆடி ஆப்கானை வெற்றிபெற வைத்தார். (ம)

# இந்திய வீரர்களுக்கு பிரத்தியேக பந்துகள்

## பாகிஸ்தான் வீரர் குற்றச்சாட்டு



'இந்திய வீரர்களுக்கு ஐ.சி.சி. உதவுகிறது. இந்திய அணிக்கு வழங்கப்பட்ட பந்துகளை சோதிக்கவேண்டும்' என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஹசன் ராசா கருத்துத் தெரிவித்துள்ளார்.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில், இந்திய அணி 302 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் இந்திய வீரர்களின் பந்து வீச்சு நம்பமுடியாத வகையில் இருந்தது. பலரும் இந்திய அணியின் பந்துவீச்சை வெகுவாகப் பாராட்டிவரும் நிலையில் இவ்வாறானதொரு சர்ச்சையைக் கிளப்பியுள்ளார் ஹசன் ராசா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இந்தியாவின் பந்துவீச்சாளர்களுக்கு கொடுக்கப்பட்ட பந்துகளை சோதனை செய்யவேண்டும். அவர்களுக்கு வழங்கப்பட்ட பந்துகளில் இருந்து மட்டும் அதிக திரும்பல் மற்றும் வேகம் கிடைக்கிறது. ஷமி மற்றும் சிராஜ் இருவரும் ஆலன் டொனால்ட் மற்றும் மகாயா நிடினி போல் பந்துவீசுகின்றனர். ஷமியின் பந்துவீச்சில் ஏற்பட்ட ஸ்விங் குறித்து மத்தியூஸ்கூட ஆச்சரியப்பட்டார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இந்தியாவுக்கு வித்தியாசமான பந்துகளைக் கொடுத்து உதவி செய்கிறது. இதில் மூன்றாவது நடுவரின் தலையீடும் இருக்கலாம்' - என்றார். (ம)

## இன்றைய ஆட்டம்

| | | | |
|---|---|---|---|
| இன்றைய ஆட்டம் | இங்கிலாந்து - அவுஸ்திரேலியா | இடம் அஹமதாபாத் | நேரம் பி.ப. 2.00 மணி |
| இன்றைய ஆட்டம் | பாகிஸ்தான் - நியூஸிலாந்து | இடம் பெங்களூர் | நேரம் மு.ப. 10.30 மணி |

## தினம் ஒரு பரிசு நாள் 29 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆர்.பிரியங்கராஜ் | - கோண்டாவில் | ந.அஹசியா | - அரியாலை |
| சி.சித்திராங்கி | - கொக்குவில் மேற்கு | ப.ஷாமினி | - அல்லைப்பிட்டி |
| ப.டிசான் | - கோப்பாய் தெற்கு | தா.தருணன் | - ஊரெழு |
| கி.சபீசன் | - காரைநகர் | எச்.ஹரிச்சந்திரன் | - மாவிட்டபுரம் |
| செ.செந்தில்குமரன் | - கந்தர்மடம் | எல்.நித்திலா | - வலித்தூண்டல் |
| வாசுகி நந்தகுமார் | - அச்சுவேலி தெற்கு | ஜே.விக்னேஸ் | - கருங்காலிக்குளம் |
| நி.குகந்தினி | - மூளாய் | எல்.பிரகலாதன் | - ஒட்டுசுட்டான் |
| [illegible] | - [illegible] | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில் என்னும் சர்வாதிகாரி

குதிரையின் குணம் அறிந்துதான் அதற்கு கொம்பு கொடுக்கவில்லை என்று மூத்தோர் சொல்வார்கள். ரணிலின் நடத்தையைத் தெரிந்துதான் அவருக்கு ஜனாதிபதி பதவியை இந்த நாட்டு மக்கள் வழங்காமல் இருந்துவந்திருக்கின்றார்கள். கடந்த ஆண்டு பின் கதவால் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதன் பின்னர் அவரது சுயரூபங்களைப் பார்க்கும்போது அப்படித்தான் தெரிகின்றது. மக்கள் தங்களை ஆள்பவர்களைத் தெரிவுசெய்வதற்கும் தங்கள் இறைமையைப் பிரயோகிப்பதற்குமான தளமே தேர்தல். அந்தத் தேர்தலை எப்படி நிறுத்தலாம் அல்லது காலம் தாழ்த்தலாம் என்பது தொடர்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிந்தித்துக்கொண்டிருக்கின்றார். அது மக்களின் உரிமைகளைப் பறிக்கும் நடவடிக்கை. பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பிலும், மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பிலும் ஆராய்வதற்கு குழுவொன்றை நியமித்திருந்தார். நீதி அமைச்சர் ஊடாக தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான சட்டவரைவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழலில் 'தற்போதுள்ள அனைத்துத் தேர்தல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய தகவல்களைப் பெற்று நடைமுறைத் தேவைகளுக்கு ஏற்ப தேர்தல் சட்டங்களை திருத்தத் தேவையான பரிந்துரைகளை 6 மாதங்களுக்குள் வழங்க, ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையிலான 10 பேர் கொண்ட விசாரணைக் குழுவை நியமிக்கும் வர்த்தமானி அறிவித்தலை' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டிருக்கின்றார். இந்தக் குழுவின் பரிந்துரை கிடைக்கும் வரையிலும், அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் வரையிலும் தேர்தல்கள் எல்லாவற்றையும் இழுத்தடிப்பதற்கே ரணில் திட்டமிடுகின்றார் என்பது வெளிப்படையானது.

தனக்கான வெற்றி வாய்ப்பு உறுதிப்படுத்தப்படும் வரையில் தேர்தலை இழுத்தடிக்கப்போகின்றார் என்பது தெரிகின்றது. அதுவே அவருக்குப் பாதகமாக மாறப்போகின்றது என்பதுதான் உண்மை. ஆனாலும், தனது அதிகாரத்தை தக்க வைப்பதற்கும், கிடைத்துள்ள அதிகாரத்தை ஆகக்கூடிய காலம் அனுபவிக்கவும் அவர் விரும்புகின்றார். அதற்காக மக்களின் ஜனநாயகக் குரல்வளையை நசுக்குகின்றார். உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தும் அதனை நடத்தத் தவறியிருந்தார் ஜனாதிபதி ரணில். மிகவும் கீழ்த்தரமான உத்திகளைப் பயன்படுத்தி அந்தத் தேர்தலை நடத்த முடியாமல் செய்த அவர், இப்போது ஆணைக்குழுக்களையும் – விசாரணைக் குழுக்களையும் – அமைத்து எஞ்சிய தேர்தல்களையும் இழுத்தடிப்புச் செய்யத் தொடங்குகின்றார்.ஜனாதிபதி ரணிலின் இந்தப்போக்குகள் தொடர்பில் மேற்குலகநாடுகளின் தூதரகங்களுக்கு எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக விலாவாரியாக எடுத்துக்கூறி வருகின்றன. மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றன. பொருளாதார நெருக்கடிக்குள் ஜனாதிபதி ரணிலை சங்கடப்படுத்தக்கூடாது என்று அந்தநாடுகள் கூறிக்கொண்டாலும், தேர்தலை ஒத்திப்போடும் ரணிலின் நடவடிக்கைக்கு துணைபோகத் தயாரில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் இந்த விடயத்தை நேரடியாகவே கூறியிருக்கின்றனர். தேர்தலை ஒத்திப்போடும் அவரது நடவடிக்கையை தாங்கள் ரசிக்கவில்லை என்பதை அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

இதன்பின்னர்தான் மேற்குலக நாடுகளைச் சாடும் அஸ்திரத்தை ரணில் ஏவத்தொடங்கியிருந்தார். ஆனாலும் மேற்குலக நாடுகள் தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ளவில்லை. தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன. தற்போதைய சூழலில் மக்கள் தேர்தலுக்காக வீதிக்கு இறங்கமாட்டார்கள் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். பொருளாதார நெருக்கடியின் விளைவால் அவதிப்படும் அவர்களால் போராட முடியாது என்பதும் ரணிலுக்குத் தெரியும். ஆனால், இந்த ஆட்சியாளர்களால் தங்களுக்கு நெருக்கடி என்று அவர்கள் உணரும்போது, அதனால் உருவாகும் புரட்சி, கோத்தாவைப் போன்று ரணிலையும் விரட்டியடிக்கக்கூடும்.

**வடமாகாண மரநடுகை மாதம்** நவம்பர் 2023

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்."

- அலெக்சாண்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)






## மீனவர் வாழ்வியலை சிதைக்கும் நடவடிக்கைக்கு கண்டனம்

### பல்கலைக்கழக மாணவர்கள் அறிக்கை

**யாழ்ப்பாணம், நவ. 4**

**வடக்கு - கிழக்கு மீனவர்களின் வாழ்வியலைச் சிதைக்கும் செயற்பாடுகளை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் கண்டித்துள்ளனர்.**

சீனத்தூதுவர் வடக்குக்கு வருகை தரவுள்ள நிலையில் மாணவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் சீன நிதியுதவியுடன் கடல் விவசாயத்தை அரசாங்கம் பலவந்தமாக மேற்கொள்வதால் தாம் பெரும் பொருளாதார இழப்பை சந்தித்துள்ளதாகவும், தமது வாழ்வாதாரத்தை சீர்செய்வதற்கு பதிலாக பொருளாதார ரீதியில் சாத்தியமில்லாத விடயங்களை திணிப்பதால் பிரச்சினைகள் ஏற்படுவதாக வடக்கு மாகாண மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தப் பண்ணைகளால் மீன் இனப்பெருக்கம் பாதிக்கப்படும் என்று மீனவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். கொழும்பில் அல்லது மூன்றாம் நாட்டில் வசிக்கும் மருத்துவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் பல பல்தேசிய நிறுவனங்களுக்குச் சொந்தமான பண்ணைகளில் தாங்கள் வெறும் தொழிலாளர்கள் என்றும் மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேபோன்ற நடவடிக்கை நாட்டில் வேறு எங்கும் மேற்கொள்ளப்படாத நிலையில், வட மாகாணத்தில் மட்டும் கடல் அட்டைப் பண்ணைகள் ஊக்குவிக்கப்படுவது ஏன் என்றும் மீனவர் தலைவர்கள்கேள்விஎழுப்பியுள்ளனர்.

வடமாகாண மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி நடவடிக்கை ஏற்கனவே நலிவடைந்து வரும் நிலையில், அண்மைக்காலமாக சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் கடற்றொழில் அமைச்சின் நடவடிக்கை மீனவ சமூகத்தினரிடையே மேலும் அதிருப்தியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மீனவர்களின் நலனைப் பணயம் வைத்து சீன நலன்களை ஊக்குவிக்கும் இத்தகைய முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதாக மீனவர் சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் வடமாகாண மீனவர்களுக்கு ஆதரவாக நின்று எமது வளங்களை பிற நோக்கங்களுக்காக ஆக்கிரமிக்கும் சீன அரசாங்கத்தின் எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிர்ப்புத் தெரிவிப்போம் என்பதை சுட்டிக்காட்டுகின்றோம் - என்றுள்ளது.

(ஒ-125)

## 'மலையகம் 200' கொண்டாட குழு!

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு 'மலையகம் - 200' என்ற தொனிப்பொருளில் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேசிய ரீதியில் இந்த நிகழ்வுகளை நடத்த அரசாங்கமும் திட்டமிட்டுள்ளது.

இதற்கென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் அமைச்சரவை குழுவொன்றை நியமித்துள்ளார். மலையக மக்களின் வாழ்க்கைத்தரம், கல்வி, சுகாதாரம், இருப்பிட வசதி, பொருளாதார மற்றும் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டு இந்தக்குழு செயற்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் நீர் வழங்கல் அமைச்சு, தோட்ட உட்கட்டுமான அபிவிருத்தி அமைச்சு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றையும் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். (ச-6)

**நாளை** 04.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி 19

சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம் : 04.34 - 06.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயத்தை தக்கவைப்பது எங்கள் கைகளிலேயே உள்ளது!

## யாழ்.மாவட்டச் செயலர் எடுத்துரைப்பு



யாழ்ப்பாணம், நவ.4

**சமய விழாக்கள், கோயில்களை அமைத்தல், கோயில்களின் வளர்ச்சி ஆகியவற்றுக்குச் செலவு செய்யப்படும் கோடிக்கணக்கான பணம் எங்களுடைய சைவசமய உள்ளார்ந்த உண்மைகளை இன்றைய இளைய சந்ததியினருக்கு கடத்துவதற்கு - வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அமைகிறதா? என்பதை நாம் உற்றுநோக்க வேண்டும். சைவசமய தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களையும் கலாசார கோட்பாடுகளையும் எமது சந்ததியினருக்கு எடுத்துரைப்பதற்கு நாமே ஊன்றுகோலாகச் செயற்படவேண்டும்.**

-இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறையும் அகில இலங்கை சைவமகாசபையும் இணைந்து நடத்திய திருமந்திர ஆன்மீக மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுகையில் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: நாமே சைவசமயத்தின் ஊற்று என்று பெருமை பேசும் நாங்கள் எங்களுடைய சைவசமய உண்மைகளை அறிந்திருக்கின்றோமா? எதிர்கால சந்ததிகளான சிறுவர்கள் அறிந்திருக்கின்றார்களா? என்பது பெருநெருடலே. கோயில்களில் நடக்கும் சாதாரண கிரியை வழிபாடுகள் தொடர்பான சரியான விளக்கங்கள் கூட எங்களுக்குத் தெரிவதில்லை.

சமய விழாக்கள், கோயில்களை அமைத்தல், கோயில்களின் வளர்ச்சி ஆகியவற்றுக்குச் செலவு செய்யப்படும் கோடிக்கணக்கான பணம் எங்களுடைய சைவசமய உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அமைகிறதா? என்பது கேள்விக்குறியாகவிருக்கிறது.

சைவசமயத்தின் உண்மையான உள்ளார்ந்த அர்த்தம் என்னவென்பதை எதிர்காலச் சந்ததியினர் அறியாதவரை சமயத்தைக் காப்பாற்றுவதும், வளர்த்தெடுப்பதும் பிரயத்தனமானதாகவிருக்கும். சைவசமயத்தை எவ்வாறு நாம் வளர்க்கப்போகின்றோம்? தக்கவைக்கப் போகின்றோம்? என்பது எமது கைகளிலேயே உள்ளது - என்றார். (ச-66)



# உணவுப் பாதுகாப்பு பேணை கிளிநொச்சியில் கலந்துரை

கிளிநொச்சி, நவ.4

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார உதவித் திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது உணவுப் பாதுகாப்பில் மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. (ச-113)

# சுண்டுக்குளியில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ் .மாவட்ட 'நைற்றா' நிறுவனத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30மணி தொடக்கம் 12.30மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி இல. 44, சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையில் இந்தக் குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

குருதிக்கொடையாளர்கள், ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி-159)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். திடீர்ச் செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** அதிகப்படியான செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். கவனமாக இருக்கவும்.

**மிதுனம் :** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் காரிய அனுகூலமாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும். ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும். முக்கியமான முடிவு ஒன்று எடுப்பீர்கள். சூரிய பகவானை வழிபடுவது நலம் தரும்.

**கன்னி:** மனதில்தைரியமும்தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்க ளால் ஓரளவு அனுகூலம் ஏற்படலாம். மகிழ்ச்சி கிடைக்கும்.

**விருச்சிகம் :** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். ஆதாயம் உண்டாகும். பெருமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

# கிராமிய வங்கிகள் சமாச புதிய இயக்குநர்சபை

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்துக்கு புதிய இயக்குநர்சபை கடந்த வாரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நகரிலுள்ள சமாச அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் சமாசத்தின் தலைவராக செ.செல்வராசா, உபதலைவராக ப.கேசவநாதன் மற்றும் பணிப்பாளர்களாக ப.கோடீஸ்வரநாதன், க.வேலும்மயிலும், ந.கணேசலிங்கம், சு.ரவீந்திரன், நா.கணேசன், செ.காந்தராசா, சி.சிவகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-17)

# தென்னைச் செய்கை ஊக்குவிக்க ஏற்பாடு



யாழ்ப்பாணம், நவ. 4

வடக்கில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் தென்னங்கன்றுகளை நடுகை செய்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும் என்று தென்னை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

தற்போது மழைகாலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிமையாளர்கள் தமது வெற்றுக்காணிகளைத் துப்புரவு செய்து பயன்தரு தென்னங்கன்றுகளை பயிரிடலாம்.

அதற்கான ஆலோசனைகள் மற்றும் பயிரிடும் முறைகள் தொடர்பில் விளக்கங்கள் ஆகியவற்றை எம்முடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று தென்னை அபிவிருத்திச்சபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-17)

# கசிப்புக்கோட்டை முற்றுகை 2800 லீற்றர் கோடா மீட்பு

கிளிநொச்சி, நவ. 4

கிளிநொச்சி, இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாயவனூர் காட்டுப்பகுதியில் இடம்பெற்று வந்த கசிப்புக்காய்ச்சுமிடம் முற்றுகையிடப்பட்டு 2 ஆயிரத்து 800 லீற்றர் கோடா மீட்கப்பட்டுள்ளது என்று இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுகிறது என நேற்றுமுன்தினம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தச் சட்டவிரோதச் செயல் முறியடிக்கப்பட்டது.

பொலிஸார் வருவதை அவதானித்துவிட்டு சந்தேக நபர்கள் தப்பியோடிய நிலையில் அவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச- 113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதைக்கும் விலையேற்றம் யாழில் தீப்பந்தப் போராட்டம்



யாழ்ப்பாணம், நவ. 4

மின்கட்டணம் மற்றும் எரிபொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் கடந்த புதன்கிழமை தீப்பந்தப் போராட்டம் இடம்பெற்றது.

கொல்லங்கலட்டிப் பகுதியிலிருந்து கீரிமலை சிவன்கோவில் வரை இந்த தீப்பந்தப் போராட்ட பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மின்சாரம், எரிபொருள் விலை அதிகரிப்பால் உற்பத்திப் பொருள்களின் விலைகள் சடுதியாக உயர்வடையும். மக்கள் மீது தொடர்ந்தும் சுமைகளைத் திணிக்கும் வகையில் அரசு செயற்படுகிறது. அழுத்தங்களுக்குள்ளாகும் மக்களுக்குப் பாதீட்டில் தீர்வு வேண்டும் என்று போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் இளைஞர்கள், பொதுஅமைப்பினர், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-27)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை அதிபர் சேவை தரம் - III இற்கு தெரிவாகி
இன்று (04.11.2023) நியமனம் பெறும்
எமது பாடசாலை ஆசிரியர்களான







திருமதி லவுசி பகீரதன் | திரு.சுப்பிரமணியம் கோணேஸ்வரன் | திருமதி நளாயினி சஞ்ஜீபன்

Congratulations

ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் மேலும் பதவி உயர்வுகள் பெற்று சேவையில் சிறந்து விளங்க மனமார வாழ்த்துகின்றோம்.

Best Wishes

நலன்புரிச் சங்கம்
கிளி/பூநகரி மத்திய கல்லூரி
பூநகரி.

Congratulations!

(CS 26802) A-1


# வளவாளர்கள் இணைப்பு விண்ணப்பம் கோரல்

அளவெட்டி கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்க ளில் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும் மற்றும் இசைவாத்தியக் கருவிகள் ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

மேற்குறித்த பாடநெறிகளை கற்பிக்க ஆர்வமுடைய வளவாளர்கள், ஆசிரியர்கள் (தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட) தங்களது சுயவிவரங் களை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் தெல்லிப்பழை, அளவெட்டி தெற்கு அளவெட்டி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு அபிவிருத்தி அலு வலர் சி.மகிந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தொடர்புகளுக்கு 0779770732, 0759769654 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக் கோ அல்லது 0764772486 என்ற வட்ஸப் இலக்கத்துக்கோ தொடர்புகொள்ள முடியும். (ய)


**மலிவான விலையில் இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு**

* உமி நீக்கும் இயந்திரம்
* அரிசியில் இருந்து கற்களை நீக்கும் இயந்திரம்
* மா அரைக்கும் இயந்திரம்
* உரப்பை தைக்கும் இயந்திரம்

போன்ற இயந்திரங்களை மலிவான விலையில் சமுத்திரா ரேடஸில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
**021 728 4006, 077 4949 683**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இற்கான
நியமனத்தைப்
பெற்றுக்கொள்ளும்
எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
பிரபாதேவி இளந்திரையன்
(B.A, M.A, M.Ed)
அவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.



Congratulations

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ மட்டுவில் தெற்கு
சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி.


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

**01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு புலோப்பளை பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான**

## கேள்வி அறிவித்தல் 2024

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- | 06.11.2023 தொடக்கம் 20.11.2023 வரை (அலுவலக நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- | 21.11.2023 பிற்பகல் 2.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- | 21.11.2023 பிற்பகல் 2.00 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம் |

**பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மரக்கறி மற்றும் மீன்சந்தை | 2,112,676.00 | 42,000.00 | 2,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 2,338,050.00 | 46,000.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 83,050.00 | 5,000.00 | 2,000.00 |
| 04 | கோழியிறைச்சிக்கடை | 393,751.00 | 8,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 05 | கோழி இறைச்சிக்கடை | 91,384.00 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி "** என்ற முகவரிக்கு 21.11.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
09. மாட்டிறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தயானந்தன் கர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.** (cr.40912) (N.22) **04.11.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மின்சார துவிச்சக்கரவண்டி விற்பனைக்கு உண்டு**

மின்சாரத்தில் இயங்கும் புதிய துவிச்சக்கர வண்டிகளை ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் எனும் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


தொடர்புகளுக்கு:
077 077 6469, 077 4949 683

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் வேலைவாய்ப்பு**

மேற்படி புத்தகசாலை மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு வேலையாட்கள் உடனடியாக தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
077 4949 683, 077 077 6469

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 . 04 . 1948 | 02 . 11 . 2023 |

எமது நிறுவனத்தின் முகாமையாளரும் மூத்த உறுப்பினர்களுமான **தர்ஷிகன், தனோஜன்** அவர்களின் பாசமிகு தந்தை


## ஆறுமுகம் தர்மலிங்கம்

அவர்கள் நேற்றுமுன்தினம் (02.11.2023) வியாழக்கிழமை அன்று திடீரென காலமான செய்தி கேட்டு மிகுந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும் ஊழியர்களும்**
**ஞானம் பெயின்ற்**
**ஓட்டுமடம்**

(CS 52716) (Ak.1)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 - 01 - 1957 | 02 - 11 - 2023 |

## கந்தையா சதானந்தன் (வவா)

இணுவில் மேற்கு, வட்டுவினியைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சதானந்தன் அவர்கள் நேற்றுமுன்தினம் (02-11-2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கனகம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற பத்மாவதியின் அருமைப் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான சோதிப்பெருமாள் (JP, ஓய்வுபெற்ற அதிபர்) சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், மீனலோசனியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கருணானந்தன் மற்றும் ஆனந்தபாஸ்கரன் (ஆனந்தன், கனடா), ஆனந்தகேதீஸ்வரன் (ஈசன்), வித்தியானந்தநங்கை (சுவிஸ்), சத்தியானந்தநங்கை (பிரான்ஸ்), சத்தியானந்தன் (அப்பன்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், யாழினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச வைத்தியசாலை அடம்பன்), சர்மினி (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராகுலனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலயக்கல்வி அலுவலகம் மடு) அன்பு மாமனாரும், விரோஷின், ஷாருசி ஆகியோரின் தாத்தாப்பாவும், யோகேந்திரன் (சுவிஸ்), ஜெயக்குமாரன் (பிரான்ஸ்), ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), சந்திரலோசனி, விக்கினேஸ்வரி, பாமினி (கனடா), சிவனேஸ்வரி (ஓய்வுபெற்ற போதனாசிரியர்), சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனரும் சுகந்தமலர் (லண்டன்), தபானந்தன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் சகலனும், சோதிலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதிகளின் சம்பந்தியும், சசிகரன் - ஜீத்தா, றஜீவ்கரன் - திவானா, தனுஷியா - ஹரி ஹஜன் ஆகியோரின் சித்தப்பாவும், சுகாசினி, ஶ்ரீசிகா - சுரேஸ், துளசிகா - சிவசஜிதரன் ஆகியோரின் பெரிய தந்தையும், இந்துஜா - சுமன், சோபிதா - அஜந்தன், ஜெனித்தா - நிஷாந், சரபன், சரசவி, சாரகி ஆகியோரின் மாமனும் புயல், முகில், றக்ஷா, தீரன், ஹருணியா, ஹர்ஷியா, ஹரிசுபன், இஷ்ணு, அர்ச்சுனா, ஜெஜெஸ்னா, தியானா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


"சரஸ்வதி மஹால்",
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்

தகவல் :
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## இராசையா இராஜேந்திரவரதன் (கஜேந்திரன்)

### (ஓய்வுபெற்ற வல்வெட்டித்துறை நகரசபை கணக்குப்பதிவாளர்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.03.1946 | 31.10.2023 |

யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்.அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா இராஜேந்திரவரதன் கடந்த (31-10-2023) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா, அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் அன்னம்மா ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற புஸ்பலீலாவினதும், புவனேஸ்வரியினதும் அன்புக் கணவரும், பிரேமிளா (ஜேர்மனி), திரிபுரன் (லண்டன்), தயாபரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமார், அர்ச்சனா, குகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவித்தா, நிருசங்கர், ஜெனார்த்தன், சக்தி, சனன், யாதவி, ஹஸ்வின் அவர்களின் அன்புப் பேரனும் ஆதீஷ், ஆலியா அவர்களின் பாசமிகு பூட்டனும், சச்சிதானந்தம், தேவகாந்தன், சந்திரகாந்தன், புஸ்பகாந்தன், கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு அண்ணனும், யெகசோதி, புஸ்பநாயகி, ஸ்ரீகோதை, அனித்தா, கணேசா ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது அச்சுவேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அயலவர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

துரைஐயா அவெனியூ,
சந்நிதி வீதி,
அச்சுவேலி.

தகவல்:
**குடும்பத்தினர்**
**இ.தயாபரன்**
**021 205 6544**

(cs.52704) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் காலணி திருட்டு அதிகரிப்பு

## பக்தர்கள் அந்தரிப்பு; கட்டுப்படுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.4

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலயச் சூழலில் அண்மைக் காலமாக அதிகளவான காலணிகள் மற்றும் துவிச்சக்கரவண்டிகள் என்பன களவாடப்பட்டு வருகின்றன என்று ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

ஆலய வளாகத்தில் பக்தர்கள் கழற்றி விட்டு செல்லும் விலையுயர்ந்த காலணிகள் கடந்த பல நாள்களாக தொடர்ச்சியாகக் களவாடப்பட்டு வருகின்றன.

வாராந்தம் வெள்ளிக்கிழமைதோறும் நல்லூரானைத் தரிசிப்பதற்காக ஏராளமான அடியவர்கள் ஆலயத்துக்கு வருகை தரும் நிலையில் அந்த நாளில் குறைந்தது பத்துக்கும் மேற்பட்ட காலணிகள் காணாமற்போகின்றன.

இந்த காலணித் திருட்டால் உள்ளூர் பக்தர்கள் மாத்திரமின்றி நல்லூர் முருகனைத் தரிசிக்கவரும் சுற்றுலாப் பயணிகளும் அவதியுறுகின்றனர்.

அதேவேளை ஆலயத்தில் கடந்த வாரம் முதியவரொருவரால் நிறுத்திவைக்கப்பட்ட துவிச்சக்கரவண்டி பூட்டு உடைத்து திருடப்பட்டுள்ளது.

எனவே நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சூழலில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள இந்தத் திருட்டுகளைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-66)

# ஊழல் அற்ற தேசம் விழிப்புணர்வூட்டல்

யாழ்ப்பாணம், நவ.4

யாழ். இந்தியத் துணைத்தூத ரகத்தின் ஏற்பாட்டில் ஊழல் தடுப்பு வாரத்தை முன்னிட்டு 'ஊழல் அற்ற தேசத்தை உருவாக்குவோம், ஊழல் வேண்டாம்' எனும் கருப்பொருளில் விழிப்புணர்வூட்டல் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்தியத் துணைத்தூதுவர் நட்ராஜ் ஜெயபாஸ்கர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதரக பதவிநிலை அதிகாரிகள், அலுவலர்கள் பங்கேற்று ஊழல் தடுப்புக்கான விழிப்பு ணர்வு உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர். (ச-27)


# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 06 . 1930



மறைவு
02 . 11 . 2023

## பண்டாரி கிருஷ்ணன்

**(S.P.கிருஷ்ணன் - எழுத்தாளர்)**

யாழ். சாவகச்சேரி மட்டுவிலை பிறப்பிடமாகவும், மட்டுவில் வேரற்கேணியை வசிப்பிடமாகவும், யாழ்ப்பாணம் அரியாலையை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட, பண்டாரி கிருஷ்ணன் அவர்கள் கடந்த (02.10.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டாரி, சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா, மங்களம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்பழகன் (கண்ணன்) மற்றும் மதியழகன் (பாபு), வேலழகன் (பாப்பா), பேரழகன் (பாப்பி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறீத்திராணி, வசந்தி, ஜெகதீஸ்வரி (திலகா), காமலீற்றா ஆகியோரின் அன்பு மாமனாரும், சாகித்தியா, மோகனியா, தீபிகன், பிரவீன், பிரகவி, பிரதாபன், சாகித்தியன், பொற்சுடர், இசைமதி, பிரீத்திகா, பிரியந்திகா, பிருந்தா ஆகியோரின் பாசமிகு பேரனும், பவளம்மா, வேலாயுதம், சுப்ரமணியம், அன்னம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்பட்டு இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளும்படி கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்.

**இல.244/4,**
**கண்டிவீதி, அரியாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 067 4073**

(CS 26804) A-1



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி இன்று (04.11.2023) அதிபர் நியமனம் பெறும் ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



திரு.சரவணபவானந்தம் தயாளன்
BSc, PGDE, NDT Maths, M.Ed,



திரு.குலேந்திரம் இரவீந்திரன்
B.Com, PGDE



திரு.கதிர்காமத்தம்பி குகதீபன்
BA, PGDE, MEd,Maths Trd



திரு.சங்கரப்பிள்ளை சுதாகரன்
SP Trained (W.R), BEd



திரு.பாலசுப்பிரமணியம் பத்மநாதன்
B.A(Hons), M.A, M.Ed (Hons), PGDE



திருமதி சோபனா ஐங்கரன்
BSc, PGDE, NDT



திருமதி தாரணி ஜெகதீஸ்வரன்
B.A(Hons), PGDE, M.Ed

**கல்விசார்,**
**கல்விசாரா ஊழியர்**
**நலன்புரிக் கழகம்**
**யா/ ஸ்கந்தவரோதய**
**கல்லூரி**
**சுன்னாகம்.**

(CS 26809) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடம்பன் முன்பள்ளி சிறுவர் தின நிகழ்வுகள்



மன்னார் அடம்பன் முன்பள்ளிகளின் சிறார்கள் இணைந்து கொண்டாடிய சிறுவர்தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மாந்தை பிரதேச செயலாளர் பங்கேற்றார். மன்னார் மாவட்ட ரோட்டரிக் கழக அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர், மன்னார் ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-213)



# ஜேர்மன் மொழிப் பரீட்சையில் யாழ்.இந்து மாணவர்கள் சித்தி

யாழ்ப்பாணம், நவ. 4

ஜேர்மன் மொழிப் பரீட்சையில் யாழ்.இந்துக் கல்லூரியின் ஒன்பது மாணவர்கள் முதற் தடவையாக சித்திபெற்றுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட இந்த ஜேர்மன் மொழிப் பரீட்சையில் முதற்தடவையாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இதில் யாழ். இந்துக் கல்லூரியின் மூன்று மாணவர்கள் திறமைச் சித்தியும் ஆறு மாணவர்கள் சாதாரண சித்தியும் அடைந்துள்ளனர். (ச-66)



# நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தால் கொக்குவில் பொதுநூலகத்துக்கு அண்மையில் ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.


கொக்குவில் பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி மனோஜ்குமார் கலந்துகொண்டு நூல்களை வழங்கி வைத்தார். (ரி-66)

ஊர்காவற்றுறை பிரதேசசபை முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பிரதேச சபையின் செயலாளர் பங்கேற்று காட்சிக்கூடத்தைத் திறந்து வைத்தார். (ச-9





யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் வருடாந்தக் குருதிக்கொடை முகாம் அண்மையில் திருநெல்வேலியில் இடம்பெற்றது. இதில் 30க்கும் மேற்பட்டோர் பங்கேற்று குருதித் தானம் செய்தனர். (ச-66)



# மழலைகள் உதைபந்து ஞானமுருகன் சம்பியன்

வடமாகாணத்தில் முதன்முறையாக நடத்தப்பட்ட 8 வயதுக்குட்பட்ட மழலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஞானமுருகன் அக்கடமி அணி சம்பியனைத் தனதாக்கியது.

அமரர் ச.சந்திரகாந்தன் ஞாபகார்த்தமாக அவரது நண்பர்களின் நிதி அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சுற்றுப்போட்டி அண்மையில் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டது.

இறுதிப்போட்டியில் நொதேர்ண் ஸ்போட்ஸ் கொலிஜ் அணியை எதிர்த்து ஞானமுருகன் அக்கடமி அணி மோதியது. அதில் ஞானமுருகன் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமி அணியை எதிர்த்து மோதிய றொனால்டோ அக்கடமி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்டது.

இந்தச் சுற்றுப்போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமி, தெல்லிப்பழை ஞானமுருகன் அக்கடமி, மயிலங்காடு றொனால்டோ அக்கடமி, கோண்டாவில் உதைபந்தாட்ட அக்கடமி, அரியாலை நொதேர்ண் ஸ்போட்ஸ் கொலிஜ், மருதனார்மடம் மற்றும் வேலணை ஐயனார் அக்கடமி ஆகிய 6 அணிகள் பங்கேற்றன. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மோ.சைக்கிள்...

கடந்த 29ஆம் திகதி இந்தத் திருட்டு இடம்பெற்றிருந்தது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றவிசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி கேவா வசந் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணையிலேயே 32 வயதுடைய மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. திருடப்பட்ட மோட்டார்சைக்கிள் உதிரிப்பாகங்களாக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## ஐ.நா.வின்...

வெலிமடை நீதிமன்றத்தின் கட்டடத்தொகுதி திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ரணில் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காஸா பகுதியின் மோதல் நிலைமைகளை ஒரு கோணத்திலும், ஐக்கிய நாடுகள் சபைக்குள் இலங்கையை வேறு கோணத்திலும் பார்ப்பதில் நியாயமில்லை. தூய்மையான கரங்களுடன் வந்தால் அடுத்த செப்ரெம்பர் மாதம் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கை பதிலளிக்கும். இல்லையெனில் நியாயமற்ற விடயத்துக்கு இலங்கை பதிலளிக்கவேண்டுமா? - என்றார்.

**இதேவேளை -**

காஸா விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது. ஹமாஸ் போராளிகளின் தாக்குதலைக் கண்டித்த ஐக்கிய நாடுகள் சபை, இஸ்ரேல் அதற்குப் பதிலடியாக நடத்திவரும் மூர்க்கத்தனமான தாக்குதல்களையும் போர்க்குற்றம் என்று வெளிப்படையாகத் துணிந்து அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## அமைச்சர்...

தில் நடைபெறும் புதிய தொழில்நுட்பம் மற்றும் தயாரிப்பு வர்த்தகக் கண்காட்சியை இந்திய நிதியமைச்சர் பார்வையிட்டார். வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நிகழ்வில் கலந்துகொண்டு இந்திய நிதியமைச்சரை வரவேற்றார்.

அதன்பின்னர் யாழ்ப்பாண நூலகம் மற்றும் நல்லூர் ஆலயத்துக்கு விஜயம் செய்த இந்திய நிதியமைச்சர் பின்னர் இந்திய ஸ்டேட் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் திறப்பு விழாவிலும் கலந்துகொண்டார். பின்னர் யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டார். இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், 'அன்றிலிருந்து இன்றுவரை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருங்கிய உறவு இருந்ததையும், நாட்டின் தேவைக்காக அவர்கள் ஒருவரையொருவர் பல்வேறு வழிகளில் ஆதரித்ததையும் மரியாதையுடன் நினைவுகூரவேண்டும். வடக்கிலும் இந்த நாட்டிலும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வீடமைப்புத் திட்டங்கள் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய பங்களிப்புக்காகவும் குறிப்பாக இந்த மாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் நாம் இந்தியாவுக்கு நன்றி தெரிவிக்கிறோம்' - என்றார்.

நிகழ்வில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதுவர் நட்ராஜ் ஜெயபாஸ்கர், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26-27-66-20)

## நல்லூர்...

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

அமைச்சர் நிர்மலா சீதாராமன் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்போது அங்கு கூடியிருந்தவர்களிடம் 'நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பூசகரின் பெயர் என்ன?' என்று கேள்வி எழுப்பினார். அப்போது அங்கிருந்தோர் 'பிரசன்னா குருக்கள்' என்று அவர் பெயரைச் சொன்னதும், "ஓ, இவரா அவர்? இவர் உலகளவில் தற்போது பிரபலமாயிற்றே. இவர் நல்லூர் ஆலய மஹோற்சவத் தின்போது கட்டியம் கூறுவதை நான் வீடியோவில் பார்த்து ரசித்திருக்கிறேன்' என்று புகழ்ந்து பாராட்டினார்.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவத்தின்போது நடைபெறும் ஒருமுகத் திருவிழாவில் விஸ்வ பிரசன்னா குருக்களின் கணீர் குரலில் கட்டியம் சொல்லப்படும். அது சமூக வலைத்தளங்களில் மிகப்பெரிய அளவில் வைரலாவது குறிப்பிடத்தக்கது. அதனையே இந்திய நிதியமைச்சரும் பார்த்து புகழ்ந்துள்ளார். (அ-ம-26)

## காஸா...

வார்கள் என்று ஹமாஸ் தரப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது 5 ஆயிரம் ஏவுகணைகளால் தாக்குதல் நடத்தியது ஹமாஸ். இதையடுத்து அன்றைய தினம்முதல் இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்து வருகின்றது இஸ்ரேல். காஸாவில் தரைவழியாகவும் இஸ்ரேலியப் படைகள் தாக்குதல் நடத்திவரும் நிலையில், அந்த நகரம் நேற்று இஸ்ரேல் இராணுவத்தால் முற்றாகச் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. காஸாவில் உள்ள சுரங்கப் பாதைகளே ஹமாஸின் பெரும் பலம் என்று சொல்லப்படும் நிலையில், சுரங்கங்களைக் கண்டறிந்து அவற்றை அழிக்கும் நோக்கில் இஸ்ரேலியப் படைகள் தீவிரம் காட்டி வருகின்றன. (அ-ம)

## வாள்வெட்டுக்களுடன்...

யத்தில் வைத்து யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தெ. மேனன் தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு பின்னர் வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்ற தேவா, பிரசன்னா ஆகியோரின் சகாவே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றத்தால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. கைதானவருக்கு எதிராகத் தீவிரமான விசாரணைகள் பல்வேறு கோணங்களில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (அ-ம-26)

## கிளிநொச்சி...

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போதே இந்தக் கஞ்சாத் திருட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றத்தின் பணியாளர்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-214)

## சீனி...

கிலோ சீனியின் விலை 295 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சீனிக்கான வரி 25 சதத்திலிருந்து 50 ரூபாவாக நேற்றுமுன்தினம் அதிகரிக்கப்பட்டது. இதனால், சீனியின் விலை சடுதியாக அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே சீனியின் உச்சபட்ச சில்லறை விலையாக 275 ரூபா நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பிறவுண் சீனி 330 ரூபாவாகவும் பொதி செய்யப்பட்ட பிறவுண் சீனி கிலோ 350 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## கடும்...

மாக பொலிகண்டிப் பகுதியில் உள்ள கிணறு ஒன்று இடிந்து கீழிறங்கியுள்ளது. பொலிகண்டி வீரபத்திரர் கோவிலுக்கு அருகாமையில் உள்ள கிணறு ஒன்றே இவ்வாறு இடிந்து கீழிறங்கியுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள கிணற்றின் சுற்று கட்டுச் சுவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடிந்து கீழ் இறங்கி உள்ளது. அத்துடன் கிணற்றுக்கு அருகில் உள்ள நிலப்பரப்பும் வெடிப்பு ஏற்பட்டுக் காணப்படுகின்றது. கிணறு இடிந்ததற்கான காரணங்கள் எதுவும் உடனடியாக தெரியவராதபோதிலும், மழையால் கிணறு இடிந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. (அ-ம-125-100)

## டென்மார்க்கில்...

வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

வடமராட்சி கிழக்கு - செம்பியன்பற்று தெற்கைச் சேர்ந்த ஆறுமுகசாமி காண்டீபன் என்ற இளம் குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

டென்மார்க்கில் தனது குடும்பத்துடன் வசித்துவந்த அவர், எரிவாயு வெடித்து ஏற்பட்ட தீ விபத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காயமடைந்தார். இந்த நிலையிலேயே சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். (அ-ம-100)

## மரம்...

ஆறுமுகம் வீதி, கந்தரோடையைச் சேர்ந்த மாணிக்கம் நாகேஸ்வரன் (வயது -60) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தென்னையை வெட்டிய பின்னர் அதனைக் கயிறால் இழுக்கும்போது திடீரென மரம் அவர்மீது வீழ்ந்ததால் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. இதையடுத்து அவர் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார் (அ-ம-26)

## தூக்கிட்ட...

நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டான். உடற்கூற்றுப் பரிசோதனையின் அடிப்படையில் சிறுவன் 'ஐஸ்' போதைக்கு அடிமையானவன் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சிறுவன் 14 வயதில் தனது கற்றல் செயற்பாடுகளை இடைநிறுத்தி பாடசாலையில் இருந்து இடைவிலகியுள்ளான். எனினும்பாடசாலையில் சிறுவனை மீளிணைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையிலேயே அந்தச் சிறுவன் நேற்று தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான். அவன் கடந்த இரு வருடங்களாக ஐஸ் போதைக்கு அடிமையாக இருந்துள்ளார் என்பதும் பரிசோதனைகளில்தெரியவந்துள்ளது. (அ-ம-125-19)

## கண் வீக்கம்...

சேர்க்கப்பட்டிருந்த மூதாட்டியொருவர் உயிரிழந்தார். கெருடாவிலைச் சேர்ந்த இராசமணி முருகேசு (வயது-70) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கண்ணில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக இந்த மூதாட்டி வல்வெட்டித்துறை, ஊறணி மருத்துவமனையில் நேற்று முன்தினம் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா மேற்கொண்டார். (அ-ம-100)

## மயங்கி...

உயிரிழந்தார். கரவெட்டி, அரசடிச் சந்திப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தோட்டத்துவளவு, வதிரியை சேர்ந்த நாகரத்தினம் இரவீந்திரன் (வயது - 66) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக நேற்று கரவெட்டி அம்பம் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். செல்லும் வழியிலேயே அவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

முதியவர் உடனடியாக மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**களஞ்சிய வசதியுடன் கூடிய காணி விற்பனைக்கு உள்ளது**

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக 100m தூரத்தில் அமைந்துள்ள 5 ¼ பரப்பு காணி பாரிய களஞ்சிய வசதியுடன் விற்பனைக்கு உள்ளது.

**077 386 6250** CS 52707 (AK.1)


## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 07 . 1949 — மறைவு 01 . 11 . 2023

## ஜெயரதி விக்னேஸ்வரன்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், பாடசாலை ஒழுங்கை கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயரதி விக்னேஸ்வரன் கடந்த (01.11.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை இராசாத்தி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னம்மா (அராலி) தம்பதியரின் அன்பு மருமகளும், விக்னேஸ்வரன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெயராஜசிங்கம், தனபாலசிங்கம் மற்றும் ஜெயராணி (கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி, புவனேஸ்வரி, சிவராமலிங்கம், யோகேஸ்வரன் மற்றும் ஈஸ்வரி, சிவனேஸ்வரி, ஜெகதீஸ்வரன், சிவகுமாரன், இராசமணி ஆகியோரின் மைத்துனியும், நர்மிஜா (லண்டன்), பிரசாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கரன் (லண்டன்) அவர்களின் பாசமிகு மாமியாரும், சஜீவ் (லண்டன்), அவர்களின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

077 364 7048
076 100 6977

(cs 24132) (2.6)

# சரஸ்வதி முத்திரை இலவச பயிற்சிகள்

யாழ்ப்பாணம், நவ.4

இலவச சரஸ்வதி முத்திரைப் பயிற்சிநெறி அங்குரார்ப்பண நிகழ்வு திருமூலர் குருபூசை நாளான அண்மையில் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மட மண்டபத்தில் இடம் பெற்றது.

ஊர்காவற்றுறை திருமங்களஞ்சேரி மதங்கமா மகாரிஷி ஆச்சிரமத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. யாக சித்தர் மாதங்கி சுவாமிகள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, பயிற்சிநெறியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (ச-66)

## எரிவாயு விலை ரூ.75 உயர்வு!

கொழும்பு, நவ. 4

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை நேற்று இரவுமுதல் 75 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பினைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம)


**ஆங்கிலக் கல்வி**

நல்லூர் பின் வீதியில் Grade 1 - 11 வரை ஆங்கில வகுப்புக்கள் அனுபவம் மிக்க கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன.

தொடர்பு: 077 711 5596, 076 698 9807

**விற்பனைக்கு**

ஆனைக்கோட்டை நவாலி றோட்டில் 15 பரப்பு வயல்காணி விற்பனைக்குண்டு.

TP: 077 199 6117

அமெரிக்க லொத்தர் விசா

* பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
* அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

இன்னும் 04 நாட்கள் மட்டுமே

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S. Road, Jaffna. T.P: 0777 55 45 28

நாளையுடன் விண்ணப்ப பதிவுகள் நிறைவடைகின்றன
இறுதி சந்தர்ப்பம் - தவறவிடாதீர்கள்

அமெரிக்க லொத்தர் இலவச வீசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2024ல் நீங்களும் அமெரிக்காவில்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

V2 Travels

0768226244
0768226241

**கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள் மலிவாக பெற்றுக்கொள்ள முடியும்**

- ▲ 24 மணிநேர சேவை (இரவு, பகல்)
- ▲ சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்.
- ▲ புறொயிலர், பேரன்ஸ், கல்பேட்ஸ், ஊர்க்கோழி, சேவல், விறாத்துக்குஞ்சு.
- ▲ இவை அனைத்தும் 33 வருடகால பூர்த்தியை முன்னிட்டு வியாபாரி களுக்கும், ஹொட்டல் தேவைகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.
- ▲ மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு யாழ். மாவட்டம் முழுவதும் விநியோகம் இலவசம்.

உரிமையாளர் : கரன்
நியூ சிற்றி பாம்
நியூ சிற்றி கோழிக்கடை
இல.8, மீன்சந்தை முன்பாக, குருநகர், யாழ்ப்பாணம்.

தொடர்பு: 076 057 0354

(CS 26807) A-1

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும், 3 1/2 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.
  திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
  நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:-
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389

789) A-1

**தரமான காணி விற்பனைக்கு**

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 69 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* நிலப்பரப்பு, நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* வட மாகாணசபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு
* எதிரே பிரதான வீதியுடனான காணி யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM
* தூரம் மிகவும் நல்ல சூழல், குடியிருப்புகள்
* சூழவுள்ள காணி வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
* பரம்பரைக்காணி, பலவருடகால தோம்பு. தூய உறுதி.
* தரகர் தேவையில்லை. பார்வையிடும் நேரம்: காலை 6.00 - மாலை 6.00 மணிவரை
* 1 பரப்பின் விலை 24 லட்சம்




Golden Real Estate (Pvt) Ltd.
Director & Owner
T.Kalaithasan

S 26789) A-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org